உ
சிவமயம்





அமரர்

# கமலம் சிவசுப்பிரமணியம்

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

23-02-2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



மாதகலைப் பிறப்பிடமாகவும்,

சிலாபம் முன்னேஸ்வரத்தை வசிப்பிடமாகவும் கொண்டவரும்,

மாதகல் பாணாகவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன்

ஆலய தர்மகர்த்தாவுமான

# அமரர் கமலம் சிவசுப்பிரமணியம்

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

23-02-2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

தாயினும் நல்ல தலைவியான மாதகல் பாணாகவெட்டி அம்மன் புவனேஸ்வரியின் காலடியில் பிறந்து வளர்ந்து கொழும்பு கொம்பனித்தெரு சிவசுப்பிரமணிய கோயில் பாதம் ஆதல், தொண்டுகள் பல புரிந்து பின்னர் முன்னேஸ்வரத்தில் வசித்த கமலா என்னும் மலரே பின்னர் முந்தல் திரௌபதை அம்மன் கோயில் பாதமும் பின்னர் சிலாபம் முன்னை நாதர் முன்னேஸ்வரத்திலும் வசித்த வரும், கமலா என்றும் எங்கள் மலரே! அன்பு. பாசம், இரக்கத்துடனும் எல்லோரார் மத்தியிலும் பாசமாகப் பழகி பாசத்துக்கும் நேசத்திற்கும் உரித்தானவளே! இனி எங்கே உன்னை காண் போம் அம்மா தாயே! எங்கள் எல்லோரையும் தவிக்கவிட்டு முன்னைநாதர் திருவடியில் சரண் அடைந்தாயே.

ஓம் சக்தி! சக்தி ஓம்

பாணாகவெட்டி அம்மனுக்கு சமர்ப்பணம்



குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தோத்திரப் பாக்கள்

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணில்நல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உளப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப்பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்
கோனாகி யானெனதன்று அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே.

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்தும் குடிகுடி
ஈசற்காட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள்அள
வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றுமென்றும் உள்ள
பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஆதியாய் நடுவு மாகி அளவிலா வளவு மாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா வேகமாகிப் பெண்ணுமா யாணு மாகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றிபோற்றி

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகி
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்கமன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் கமலம் சிவசுப்பிரமணியம் அவர்களின் வாழ்க்கை நீரோட்டம்

கடல் வளமும், நிலவளமும், பனைவளமும், வயல் வளமும் செழிக்கும் தமிழ் ஈழத்தின் யாழ்ப்பாண தலைநகரான இராமர் பாதம் பட்ட திருவடி நில மாதகல் ஊரில் சங்கமித்தை வந்திறங்கிய மாதகல் யாழ் குடாநாட்டின் வடமேற்குக் கரையோரத்தில் மருதநிலமும் நெய்தல் நிலமும் சேர்ந்து வளம் தரும் மாதகல் பதியிலே சம்பில் துறைமுகம், பாணாகவெட்டி புவனேஸ்வரி அம்மன் ஆலயம் , அரசடி சித்தி விநாயகர், நுணசை முருகப் பெருமான், வன்னிய கோயில், காஞ்சியான் கோயில் இன்னும் பல தலங்களையுடை மண்ணில் மாதகல் பானாவெட்டி புவனேஸ்வரி அம்மன் ஆலய தர்மகர்த்தாவான அமரர் விக்கிரமசிங்கம் மகேஸ்வரி தம்பதியினருக்கு மூத்த மகளாக கமலா 1956-11-03 அன்று அவதரித்தார். இவருடன் உடன் பிறப்பாக சகோதரி சரஸ்வதியும் ஆவார்.

அமரர் தனது ஆரம்பக் கல்வியை மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை சென்ஜோசப் மகா வித்தியாலயத்திலும் கல்வி பயின்று பின்னர் மாதகல் பரிஸ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தையல் நிலையத்தில் பணிபுரிந்தார்.

தொழில் பார்த்து வந்த அமரர் கமலாவை அவரது பெற்றோர்கள் இல்லற வாழ்க்கையில் ஈடுபடுத்த எண்ணினார்கள். அதன் விளைவாக 1979ஆம் ஆண்டு வைத்திலிங்கம் - தங்கம்மா (அமரர்) அவர்களின் இரண்டாவது புதல்வன் சிவசுப்பிரமணியத்தை கரம் பிடித்தார். அவர்களது இல்லற வாழ்வின் பயனாக நான்கு பிள்ளைகளான சிவகலா, சிவகணேஸ், பார்த்தசாரதி, சிவகௌசலா (இத்தாலி) ஆகியோரையும் மருமக்களாக கேதீஸ்வரன் (இத்தாலி), கல்யாணி (முன்பள்ளி ஆசிரியர்), ஜெயக்குமார் (இத்தாலி) ஆகியோரையும், மகன்வழிப் பேர்த்தியாக சங்கீதாவையும் கண்டு மகிழ்ந்தார்.

அமரர் கமலா 1990இல் கொழும்பு கொம்பனித்தெரு சப்பல் லேனிலும், 1995இல் முந்தல் குடியிருப்பிலும், பின் 2005இல் மாதகலிலும், 2007இல் சிலாபம் முன்னேஸ்வரத்திலும் இறுதிவரை கழித்தார். அமரருக்கு ஏற்பட்ட நீரிழிவு நோய் காரணமாக 3 மாத காலமாக வைத்தியசாலையுடன் காலத்தைக் கழித்த இவர் காலன் தன்னுடன் கால சக்கரத்தின் கடமையை நிறைவேற்றுவது போல 24-01-2014 வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12.15 மணிக்கு கணவன் முதல் பிள்ளைகள், மருமக்கள், பேர்த்தி முதல் உறவினர்கள் அனைவரையும் கண்ணீரில் மூழ்கவைத்து காலன் கவர்ந்து சென்றுவிட்டான். அன்னாரின் ஆன்மா இறைவன் திருவடியைச் சென்றடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவரின் ஆதங்கம்

அன்பே ஆருயிரே என் ஆருயிரே கமலா!
எனக்காகவே இவ்வுலகில் உதித்தாய் கமலா!
உனது இஸ்டம் போல் எல்லாம் நீ நடந்தாய் கமலா!
ஊரறிய உலகறிய வாழ்ந்தாயே கமலா!
எட்டு வருடமான நீரிழிவு நோயில் வாடினாய் கமலா!
நோயை எண்ணாமல் உன் மனம் போல உண்டு களித்தாய் கமலா!
மூன்றுமாத சிகிச்சை இவ்வுலகை வெறுக்க வைத்ததா கமலா!
கடைசி பயணம் உனக்குத் தெரிந்ததா கமலா!
உறவுகளிடம் ஒரு மாதத்தில் மாதகல் வருவதாக கூறினாய் கமலா!
விடிய நான் சென்றுவிடுவேன் நீ என்ன செய்வாய்?
இந்த கேள்வி என்னை வாட்டுதம்மா கமலா!
உன் கேள்விக்கு உன்னிடம்தான் பதில் உன்னிடம்
ஓடோடி வந்திடுவேன் தாயே கமலா!
முன்னைநாதர் வாழ் மக்கள் புடைசூழ உன்னை
புவனேஸ்வரி தாயிடம் மலர் வளையத்தில் அனுப்பி வைக்க
மாதகல் உறவுகள் கண்ணீர் மல்க உனை வரவேற்ற காட்சி
ஊரையே கதிகலங்க வைத்ததம்மா கமலா!
எனக்கோர் ஊன்றுகோலாய் உற்ற துணையாய் நின்றாய் கமலா!
இன்று என்னுடன் இல்லையாயினும் உன் இனிய நினைவுகளை
என் மனதில் சுமந்து கொண்டு உன் பாதங்களுக்கு கண்ணீருடன்
இம்மலரைச் சமர்ப்பிக்கின்றேன் கமலா!

# என் எதிர்பார்ப்பு...

நீ என்னை விட்டு நிரந்தரமாய் செல்வாய் என்று தெரிந்தா அன்றிரவு எனைவிட்டு அப்பாவுடன் தனியே சென்றீர்கள்! அல்லது உன் கடைசித் துடிப்பை நான் பார்க்கக் கூடாதென்றா என்னைத் தவிக்கவிட்டு காததூரம் சென்றீங்கள்? உங்கள் மரணச் செய்தி கைபேசியில் கிடைக்கும் முன்னே அந்த 10 நிமிடங்கள் என்னைத் துடிக்க வைத்த என் பரிதவிப்பை யாரிடம் அம்மா சொல்லி அழமுடியும்? நீ கண்மூடி தூங்கிய கடைசித் தூக்கத்தை நினைக்கும் போதெல்லாம் என் நெஞ்சு குமுறலை நீங்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை. என் இன்ப துன்பம் கஸ்டம் எல்லாம் தெரிந்த பிறகுமா தனியே விட்டு செல்ல மனம் வந்தது. உங்கள் உயிர் பிரியும் என்று தெரிந்து தானா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் எல்லாப் பிரச்சினைகளையும் அப்பாவிடம் இடையிடையே சொல்லி வைத்தீர்கள். எனக்கு அம்மாவாக இருந்து கடமைகளை செய்ய வேண்டிய தருணத்தில் என் மகளாக இருந்து பிடிவாதம் பிடித்த நாட்கள்தான் அதிகம். என்ன அவசரமோ என் வயிற்றில் பிறப்பதற்காகவா அவசரப்பட்டு சென்றீர்கள்? நிஜத்தினில் உங்களைத் தொலைத்துவிட்டு மீதமாக இருக்கும் 100 நாட்களை எண்ணி காத்திருக்கிறேன் உங்கள் வரவை எண்ணி. அமாவாசை நிலவுக்கு ஏங்குவது போல் உன் வரவுக்கு நான் தினம் தினம் காத்திருக்கிறேன்.

**மகள் கேதீஸ்வரன் சிவகலா**

## பிள்ளைகள் புலம்பல்

எங்கள் அன்புத் தெய்வமே
எம் பாசமிகு தாயே
ஆலமரமாக நிழல் பரப்ப எம்முடன்
சேர்ந்து சுழன்று அமைதியாக
சென்றுவிட்டாயே அம்மா
தாயே நீர் மறைந்து சென்ற
போதும் மறைய வில்லை எம் துயரம்
ஆண்டுகள் எத்தனை ஆனாலும்
ஆறாது எங்கள் துயரம்
அன்புத் தெய்வமே ஆசை அம்மாவே
கண்ணிமைக்கும் நேரத்தில்
காலன் உமைக் கவர்ந்தானோ
காலம் மாறினாலும் கரையுமோ உன் நினைவு.

**சிவகலா, சிவகணேஷ், பார்த்தசாரதி, சிவகௌசலா**

## மருமக்கள் புலம்பல்

பாசமிகு மாமியே நீங்கள் எங்கள் அனைவரையும்
ஆறாத்துயரில் விட்டுச் சென்றுள்ளீர்கள்
சொல்லில்தான் மாமி ஆனால் செயலில் எம்மை பெற்ற
தாயாய் இருந்துள்ளீர்கள் நாமும் பிள்ளைகளாகவே
நடந்து கொண்டோம். மாமியே நீங்கள்
இறைபதம் அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கேதீஸ்வரன், கல்யாணி, ஜெயக்குமார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேர்த்தி சங்கீதா புலம்பல்

தத்தி நடைபயின்ற காலம் முதலெனது
பிஞ்சுவிரல் பிடித்து முத்தமிடும் அப்பம்மாவே
அழுது அடம்பிடிக்கும் எனது அழுகையை
விளையாடி கதைகூறி சங்கீதா என்றழைக்கும்
உன் குரலை இனி எங்கே கேட்பேன் அப்பம்மா
சங்கீதா என்றெண்ணி வாய் குளிர அழைத்த நீ
சொல்லாமல் காலனுடன் போனதேன் அப்பம்மா?

## சகோதரர் புலம்பல்

அன்பை எம்மீது பொழிந்திட்ட சகோதரியே
தாய் என நின்று எமைப்பார்த்த கமலாவே
பொறுமையின் இருப்பிடமாய் விளங்கியவளே
பொல்லாத நோயுமுன்னை வாட்டியதோ சகோதரியே
தவிக்க எமை விட்டுச் சென்ற தென்ன
துயரில் தவிக்கின்றோம் தேற்றுவ தாரோ!

## மைத்துனர் புலம்பல்

முத்துச் சிரிப்பதனை முகத்தில் நிலைநிறுத்தி
பாசச் சங்கிலியால் கட்டியெமைப் போடுகின்ற
மாதகலூர் பெற்றெடுத்த செல்வமே
வீட்டிற்கு வருவோரை இன்முகாய் வரவேற்று
விருந்தோம்பல் செய்த பசியாற்றும் தாயே
உற்றார் ஊராரின் வீட்டில் நடக்கின்ற
நன்மையிலும் தீமையிலும் முன்னின்று உழைப்பவளே
கதற வெமை விட்டுவிட்டு இறைவனடி சேர்ந்தாயோ.

## பெறாமக்கள் புலம்பல்

தாய்மொழியாம் தமிழோடு எம்சைவ நெறியினையும்
அழகாக போதித்த எமதருமை தாயாரே!
பலவுதவி எங்களுக்கு இன்முகமாய் செய்துவிட்டு
பிரதிபலன் பார்ப்பதுவும் கூடாது என்றெண்ணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லாத காலனவன் உமைக் கொண்டு போனதெங்கே?
கண்ணீர் விழி சொரியத் தேடுகிறோம் தாயே
உனதுமுகம் ஓர்முறை நீ காட்டாயோ தாயே!

## உற்றார் உறவினர், அயலவர் புலம்பல்

நல்ல அண்ணாமலையான் ஆனாய் நீயே
நற்கருணை வள்ளலும் ஆனாய் நீயே
நாள்முழுதும் நல்லவற்றை சொல்வாய் நீயே
நம்குடும்ப இதயமாய் இலங்கினாய் நீயே
அன்பினிலே அன்னையாய்த் திகழ்ந்தாய் நீயே
வாழ்வை வளம்படுத்தத் தவித்தாய் நீயே
மண்ணுலகில் மாமனிதனாய் வானுலகு புகுந்தாய் நீயே
அனலிட்ட மெழுகாக அழிகின்றோம் நாமே.

## தேற்றம்

பூதலம் போற்றிட புகழ்பல பெற்றிடினும்
மாதவம் செய்து மாண்புடன் வாழ்ந்திடினும்
மானிடப் பிறப்பெடுத்து மண்ணினில் பிறந்திட்டால்
மாய்வது திண்மென்ற மாறில்லா மெய்யறிந்து
ஆறுதல் பெற்று நாமும் அரனடி தொழுது நிற்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கலுரை

திருமதி கமலம் சிவசுப்பிரமணியம் அவர்களின் திடீர் மறைவையிட்டு ஆழ்ந்த அதிர்ச்சியும் கவலையும் அடைந்தோம். அன்னார் முன்னேஸ்வரத்தில் வசித்து வந்தாலும் தன்னுடைய கணவன் பிள்ளைகளுடன் எமது ஆலயத்திற்கு வந்து திருவிழாக் காலங்களிலும் பிற விசேட பூஜைகளிலும் தவறாது ஆலயம் சிறப்பாக நடைபெற வேண்டுமென எண்ணித் தமது கருமங்களைந் செய்து கோவில் சமூகத்தின் அன்பையும் நன்மதிப்பையும் பெற்றவர். இவர் எந்த நேரமும் இன்முகத்துடன் சிரித்தபடி பேசி மக்களின் அன்பைப் பெற்றவர். இவரது மறைவு அன்னாரின் குடும்பத்திற்கு மட்டுமன்றி எங்கள் கோவில் சமூகத்தினருக்கும் ஓர் இழப்பாக அமைந்துள்ளது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆலயகுரு
**பிரம்மஸ்ரீ செ. சுந்தரேஸ்வர சர்மா**
அம்மன் கோவில்
மாதகல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பின் சிகரம்

ஈழவள நாட்டின் யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிகாமம் தென் மேற்கில் வளம்கொழிக்கும் ஊராம் மாதகல். அந்த மாதகல் பதியினில் தென்புறத்தே உள்ளதாம் பாணாகவெட்டி. இந்தப் பாணாகவெட்டியில் குடிகொண்டு வீற்றிருப்பவள் ஆதிபராசகத்தி அன்னை சிறிபுவனேஸ்வரி அம்பாள். இந்த அன்னை சிறிபுவனேஸ்வரிக்கு ஆலயம் அமைத்து அன்பர்கள் வழிபட உதவிய தர்மகர்த்தாக்கள் பரம்பரையில் வந்து உதித்தவர்தான் அமரர் சு. விக்கிரமசிங்கத்தின் மகளான மறைந்த கமலம் அவர்கள். அமரர் கமலம் அவர்களைச் சிறுபராயம் தொட்டு நான் அறிவேன். அன்னார் நல்லவர், வல்லவர், நல்ல மனமுடையவர், இன்முகத்தோடு எல்லோருடனும் அமைதியாகப் பழகும் சுபாவம் உடையவர். எந்நேரமும் சிரித்த முகத்துடனே காணப்படுபவர். கடவுள் பக்தி நிறைந்தவர். இவரது அன்பும், பண்பும் எல்லோரையும் கவர்ந்தன. இவர் ஓர் பண்பின் சிகரமாவார்.

இவர் பராயமானதும் இல்லறமென்னும் நல்லறம் ஓங்க மனைத்தக்க மாண்புடைய மணாளனாக வைத்திலிங்கம் சிவசுப்பிரமணியம் என்பவரை மணம்முடித்தனர். இவர்கள் சீரும் சிறப்புமாக வாழும் காலத்தில் நன் மக்களாக நால்வரைப் பெற்றெடுத்தனர். அவர்களுக்கு உரிய காலத்தில் கல்வி புகட்டி வல்லவர்களாக்கியவர்.

மாதகல் கிராமத்தின் தெற்கெல்லையில் அழகுற மிளிர்ந்து காட்சியளிக்கும் பாணாகவெட்டி சிறி புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தின் தர்மகர்த்தாவாக விளங்கிய அமரர் கமலம் அவ்கள் ஆலயம் சிறப்புறத் துலங்க ஆலய பரிபாலனசபையினர்க்கு மிகுந்த ஒத்துழைப்பை வழங்கி உதவியவர். அன்னாரின் மறைவு உற்றார், உறவினரை மட்டுமல்ல, ஆலய பரிபாலனசபையினரையும் குருக்கள் ஐயா அவர்களையும் மட்டுமல்ல ஊர் மக்களையே துயரத்தில் ஆழ்த்திவிட்டது.

அன்னாரின் ஆன்மா எல்லாம் வல்ல அன்னை சிறிபுவனேஸ்வரியின் பாதாரவிந்தங்களைச் சென்றடையப் பிரார்த்திக்கிறேன்.

**இ. நடராசலிங்கம்**
தலைவர்
பாணாகவெட்டி சிறி புவனேஸ்வரி அம்மன்
ஆலய பரிபாலன சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயில் பணி சிறக்க ஒத்துழைத்தவர்

மாதகல் பாணாகவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் திருக்கோயில் பரிபாலனசபை தர்மகர்த்தா திருமதி கமலம் சிவசுப்பிரமணியம் மறைவுக்கு தனது அஞ்சலியை சமர்ப்பிக்கின்றது சபை. இவர் தந்தையார் சுப்பிரமணியம் விக்கிரமசிங்கம் அவர்களையும் இந்த இடத்தில் நினைவு கூர்கின்றத. இவர்களது காலத்தில் இவர்களின் ஒத்துழைப்போடு கோயில் பல வகையில் அபிவிருத்தி கண்டது. பழம் பெருமை வாய்ந்த கிட்டத்தட்ட 10 நூற்றாண்டு களாக விளங்கி வந்த இக்கோயில் சிறுபொங்கல் கொட்டகையிலிருந்து ஆரம்பித்து இன்று மாடங்களையுடைய கோபுரத்தையும் கொண்டு திகழ்கின்றது. இன்று கோயில் எல்லா வழிகளிலும் பெயர் பெற்று விளங்கவும், கோயிலின் முக்கிய கட்டுமானப் பணிகள் நிறைவேறவும் எமது பரிபாலனசபையினர் தெரிவித்த எடுத்த ஆலோசனைகளுக்கும் தர்மகர்த்தா பூரண ஆதரவு வழங்கியமையாலே இன்று இக்கோயில் பூரணமாக நிறைவுள்ள கோயிலாக திகழ்கின்றது. பரிபாலனசபையினர் கோயில் அபிவிருத்தி வேலைகளையும் தர்மகர்த்தா கோயில் நிர்வாகக் கடமை களையும் நிறைவேற்றி இன்று யாழ் மாவட்டத்தில் பிரபல்யம்மிக்க கோயிலாக மிளிர இரு பகுதியினரும் தத்தம் சேவைகளை வழங்கி கோயில் பெயர்பெறக் காரணமாகவுள்ளனர்.

இங்கு திருமதி கமலம் அவர்கள் நாட்டு நிலை காரணமாக தூர இடத்தில் வாழ்ந்தாலும் கோயில் நிர்வாகப் பணிகளை கோயில் பூசகர்கள் மூலம் நித்திய நைமித்திய பூசைகளை நடாத்தி வந்தமை நினைவு கூரத்தக்கது. கோயில் பணிகளான புனருத்தாரண வேலைகள் பல திருமதி கமலம் காலத்தில் நிறைவு செய்யப்பட்டன. இந்த வகையில் திருமதி கமலம் காலததில் அவர்களின் ஒத்துழைப்பு காரணமாக கோயில் வளர்ச்சி கண்டதை பரிபாலனசபையினர் நினைவுகூர்ந்து அவரது ஆத்மா சாந்தியடைய அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

**வி. சிற்றம்பலம்**
ஆலய பரிபாலன சபையினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல மனிதர்

மரகதத்தீவு என வர்ணிக்கப்பட்ட ஈழவள நாட்டின் வடபால் உள்ள யாழ்ப்பாணத்தில் வளம்கொழிக்கும் கிராமமாக விளங்குவது மாதகல் கிராமம். இவ்வூரின் தென்கோடியில் உள்ள பாணாகவெட்டி என்னும் பதியினில் சிறிபுவனேஸ்வரி அம்மன் ஆலயத்தின் தர்மகர்த்தாவாக விளங்கிய அமரர் கமலா அவர்களின் இழப்பு ஊர்மக்கள் எல்லோரையும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. அன்னார் தனது தந்தையாரைத் தொடர்ந்து தானும் தர்மகர்த்தாவாகப் பொறுப்பை ஏற்று ஆலயம் அழகுற அமைய மேற்கொள்ளப்பட்ட திருப்பணிகளுக்கெல்லாம் ஆலய பரிபாலன சபையினர்க்கு ஒத்துழைப்பு நல்கியவர். எந்நேரமும் புன்சிரிப்புடன் விளங்கிய அமரர் கமலம் அவர்கள் எல்லோருடனும் இனிமையாகப் பேசும் பண்புடையவர். இப்படியான ஓர் இனியவரை இளமையிலேயே இறைவன் தன்னகத்தே அழைத்துக்கொண்டான். கடவுள் பக்தி நிறைந்த இவரை இனி எப்போ எங்கே காண்பது. இவர் இடப்பெயர்வின் போது இடம்பெயர்ந்து வெளிமாவட்டத்தில் வாழ்ந்த காலத்திலும் ஆலயத்தில் நடைபெறும் விசேட தினங்களிலும், திருவிழாக் காலங்களிலும் தவறாது சமூகமளித்து தமக்குரிய கடமைகளைச் செய்துவந்தவர். மிகவும் நல்லவர். மறைந்த கமலம் அவர்களின் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல சிறிபுவனேஸ்வரி அம்மனை வேண்டிக் கொள்வதோடு, அன்னாரின் குடும்பத்தினர்க்கும் ஆலய பரிபாலனசபையினர் தங்கள் அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**ச. கதிரவேலு**
செயலாளர்,
பாணாகவெட்டி சிறிபுவனேஸ்வரி அம்மன்
ஆலய பரிபாலனசபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# கௌரி காப்பு

## பிள்ளையார் காப்பு

முன்னின்று செய்யுள் முறையாய் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கணப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வராமற்கா.

## கௌரி காப்பு

காரணைய கூந்தற் கௌரியியற்றிய
கேதார விரதத்தை யான்படிக்க சீரிலகும்
ஐந்துகரத் தந்திமுக தண்ணலடி யார்க்கருளுங்
கந்தமலர்ச் செஞ்சரணே காப்பு.

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினிக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்துவந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளித்தாயே
கொடிய மகி ஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உனையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப்புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கு அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கு கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாரேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையைக் கணப்பொழுதே மாற்றிவிட்டால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்து வரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டு கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோல் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரமிருந்து
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்தி லோர்க்கெல்லாம் ஏற்றிளமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனை காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சலரோகம் – Diabetes

சலரோகம் என்பது குருதியில் சாதாரண அளவைவிட அதிக அளவில் சீனிச் சத்து காணப்படுதலாகும். மிதமிஞ்சிய சீனி சலத்தோடு வெளியாகும். இதனால் அதிகளவு சிறுநீர் கழிக்கப்படும்.

கிட்டத்தட்ட 2% மக்களிற்குசலரோக நோய் ஏற்படுகிறது. ஆரம்பத்திலேயே கண்டுபிடிக்கப்படும் போது சலரோக நோயானது உணவுக் கட்டுப்பாட்டினாலும், தேவைப்படின் மருந்துக் குளிகை / ஊசி மருந்து (Insuline) மூலம் கட்டுப்படுத்தப்பட்டு நோயாளி சாதாரண வாழ்வு வாழ முடிகிறது. குருதியில் சீனிச் சத்தை கட்டுப்பாட்டு வரையறைக்குள் வைத்திருக்க முடியாத பட்சத்தில் சலரோக நோயானது உடலின் சகல பாகங்களையும் பாதிக்கும். எனவே சலரோக நோய்க்கான ஆரம்ப குணங்குறிகள் காணப்படும் இடத்து உடனடியாக வைத்தியரின் சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

### சலரோக நோயின் ஆரம்பக் குணங்குறிகள்

★ அடிக்கடி சலம் கழித்தல் (குறிப்பாக இரவில்)
★ அதிகளவு தாகம் எடுத்தல்
★ சடுதியாக உடல் நிறை குறைதல்

### சலரோக நோய் நிர்வனித்தல் – Diabetes Management

சலரோக நோய்க் கட்டுப்பாடு என்பது குருதியில் சீனிச்சத்து அதிகரிக்காமல், அளவிற்கதிகமாகக் குறையாமலும், கட்டுப்பாட்டு எல்லைகளிற்குள் சீனிச்சத்தை வைத்திருத்தல் ஆகும்.

1. உணவுக் கட்டுப்பாடு மட்டும்
2. உணவுக் கட்டுப்பாடு + குளிகை
3. உணவுக்கட்டுப்பாடு + ஊசி மூலம்

### சலரோக நோயாளிகள் முற்று முழுதாக தவிர்க்க வேண்டியவை :

| | |
|---|---|
| சீனி | இனிப்புவகை |
| சர்க்கரை | கேக் |
| ஜாம் | வீவா |
| தேன் | ஹோர்லிக்ஸ் |
| பனங்கட்டி | நெஸ்ரமோல்ட் |
| கற்கண்டு | புரோட்டினெக்ஸ் |
| சொக்கலேற் | மைலோ |
| குளிர்பானம் | ஐஸ்கிறீம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சலரோக நோயாளிகள் கவனத்தில் கொள்ள வேண்டியவை

1. உணவுக்கட்டுப்பாடு மிக அவசியம்
2. வைத்தியரின் ஆலோசனைப்படி மருந்துக்குளிகை / ஊசி ஒழுங்காக எடுக்க வேண்டும்
3. மருத்துவரின் ஆலோசனையின்றி மருந்தின் அளவைக் கூட்டவோ குறைக்கவோ முயலக்கூடாது.
4. தவறாது மாதாந்த வைத்திய பரிசோதனைக்குச் செல்லல் வேண்டும்.
5. உடலில் காயங்கள் ஏற்படுவதை கூடிய அளவில் தவிர்க்க வேண்டும்
6. கால் நகங்களை வெட்டி சுத்தமாக வைத்திருப்பதுடன் வெளியே செல்லும் போது பாதணி அணி வேண்டும்.
7. காயங்கள் ஏற்படும் பட்சத்தில் உடனடியாகவே மருத்துவ உதவியை நாட வேண்டும்.
8. வைத்திய குறிப்புப் புத்தகத்தை எப்போதும் தன்னுடனே வைத்திருக்க வேண்டும்.
9. சிறிய இனிப்புப் பொருள் / குளுக்கோஸ் சிறிதளவை எப்போதும் உடன் வைத்திருக்க வேண்டும். ஏனெனில் சீனிச்சத்து குருதியில் அளவுக்கதிகமாக குறையும் சந்தர்ப்பத்தில் பயன்படுத்துவதற்கு.

## சலரோக நோயாளியின் கால் பராமரிப்பு

சலரோக நோயாளிகள் பலர் நீண்ட நாட்களின் பின் காலில் புண்கள் ஏற்பட்டு கவனிக்காமல் விடுவதனால் விரல்கள் அகற்றப்பட வேண்டிய நிலைமைகளிற்கு உட்படுகிறார்கள். இந்நிலமை தவிர்க்கப்படக் கூடியது. இப்பரிதாப நிலைமை உண்டாவதைத் தடுப்பதற்கு பின்வரும் முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

1. காலில் விறைப்பு உள்ளவர்கள் காலில் குத்தினாலோ, புண் ஏற்பட்டாலோ அவர்களால் உணர்ந்து கொள்ள முடியாது. எனவே வீட்டிற்கு வெளியே செல்லும் போது எப்பொதும் பாதணிகள் அணிய வேண்டும்.
2. ஒவ்வொரு நாளும் இரவில் நித்திரைக்கு செல்லும் முன்னர் கால்களை நன்கு கழுவி. காலில் ஏதாவது புண், கட்டி ஏற்பட்டுள்ளதா என்பதைப் பார்த்து, இருப்பின் வைத்திய உதவியை நாட வேண்டும்.
3. புண் / காயம் ஏற்படும் பட்சத்தில் கை வைத்தியம் அல்லது புக்கை கட்டுதல் போன்றவற்றை கட்டாயம் தவிர்க்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதகல் மண்ணில் விளைந்த முத்துக்கள்

| | | |
|---|---|---|
| 01. | யாழ்ப்பாண வைபவமாலை | - மயில்வாகனப்புலவர் |
| 02. | புலியூரந்தாதி | - மயில்வாகனப்புலவர் |
| 03. | காசியாத்திரை விளக்கம் | - மயில்வாகனப்புலவர் |
| 04. | ஞானாலங்கார ரூபநாடகம் | - மயில்வாகனப்புலவர் |
| 05. | உயிரியல் நிகண்டு | - மயில்வாகனப்புலவர் |
| 06. | அம்மானை | - மயில்வாகனப்புலவர் |
| 07. | கிளைவிடுதூது | - சிற்றம்பலப்புலவர் |
| 08. | ஆபஸ்தம்ப அபரப்பிரயோகம் தமிழ் உரையுடன் | - சரவணமுத்துப்புலவர் |
| 09. | வேதாந்த சுயஞ்சோதி | - சரவணமுத்துப்புலவர் |
| 10. | ஆத்ம போதப் பிரகாசிகை | - சரவணமுத்துப்புலவர் |
| 11. | நெல்லை வேலவருலா | - ஏரம்பையார் |
| 12. | நகுலேஸ்வரப் புராணம் | - ஏரம்பையார் |
| 13. | சிவராத்திரி விதி | - ஏரம்பையார் |
| 14. | கனாநூல் | - ஏரம்பையார் |
| 15. | கவணாவத்தை வயிரவரூஞ்சல் | - ஏரம்பையார் |
| 16. | காலிக்கதிரேசர் ஊஞ்சல் | - ஏரம்பையார் |
| 17. | நாகேஸ்வரி தோத்திரம் | - ஏரம்பையார் |
| 18. | சூரன் முற்பிறப்பு சரிதை | - ஏரம்பையார் |
| 19. | கண்ணப்பநாயனார் சரிதை | - ஏரம்பையார் |
| 20. | மனுநீதிச்சோழன் சரிதை | - ஏரம்பையார் |
| 21. | குவாலாலம்பூர் சிவபெருமான் ஊஞ்சல் | - ஏரம்பையார் |
| 22. | ஆசௌசதீபிகை (வினாவிடை) | - ஏரம்பையார் |
| 23. | சங்கிலியின் நாடகம் | - மதுரகவிப்புலவர் சூசைப்பிள்ளை |
| 24. | எஸ்தாக்கியார் நாடகம் | - மதுரகவிப்புலவர் சூசைப்பிள்ளை |
| 25. | கருங்குயிற் குன்றத்துக்கொலை | - மதுரகவிப்புலவர் சூசைப்பிள்ளை |
| 26. | அந்தோனியார் நாடகம் | - தம்பிமுத்துப்புலவர் |
| 27. | சங்கிலியார் நாடகம் | - தம்பிமுத்துப்புலவர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. அனேற்றோ நாடகம் - தம்பிமுத்துப்புலவர்
29. வள்ளியம்மன் நாடகம் - தம்பிமுத்துப்புலவர்
30. கோவலன் நாடகம் - தம்பிமுத்துப்புலவர்
31. தெய்வேத்தியார் நாடகம் - தம்பிமுத்துப்புலவர்
32. கயித்தார் வாசிப்பு - தம்பிமுத்துப்புலவர்
33. அரிச்சந்திரன் நாடகம் - தம்பிமுத்துப்புலவர்
34. ஜேர்மன் அம்மன் நாடகம் - தம்பிமுத்துப்புலவர்
35. இமானுவேல் நாடகம் - தம்பிமுத்துப்புலவர்
36. மாதகல் பாணாவெட்டி அம்மன் கோயில் வரலாறு - பண்டிதர் இ. இராமலிங்கம்
37. வள்ளியம்மை திருமணஞானநெறி - வித்துவான் பொன். கந்தசாமி
38. கோயிலைமைப்பும் கிரியையும் - வித்துவான் பொன். கந்தசாமி
39. நுணசை முருகமூர்த்தி பிள்ளைத்தமிழ் - வித்துவான் பொன். கந்தசாமி
40. கந்தபுராண கதையமுதம் - வித்துவான் பொன். கந்தசாமி
41. திருப்புகழ் மாலை - வித்துவான் பொன். கந்தசாமி
42. திருமுறைத் திரடஇடு - வித்துவான் பொன். கந்தசாமி
43. திருப்பள்ளியெழுச்சி திருவெம்பாவை திருப்பொற்சுண்ணம் (தொகுப்புநூல்) - வித்துவான் பொன். கந்தசாமி
44. முருகமூர்த்தி பன்னிரு திருமுறைத் திரட்டு - வித்துவான் பொன். கந்தசாமி
45. பஞ்சமுகப்பிள்ளையார் வரலாறும் தோத்திரப்பாடலும் - வித்துவான் பொன். கந்தசாமி
46. நுணசையந்தாதி - வித்துவான் பொன். கந்தசாமி
47. பசி - மாதகல் செல்வா
48. மனிதனாநீ - மாதகல் செல்வா
49. முருகனந்தாதி - சு. சிற்றம்பலம் (பித்தன்)
50. மாதகல் நுணசை முருகன் அர்ச்சனை மாலை - சு. சிற்றம்பலம் (பித்தன்)
51. மேற்கோள் ஆயிரம் - மாதகல் வ. கந்தசாமி
52. பண்டாரநாயக்கா பொன்மொழிகள் - மாதகல் வ. கந்தசாமி
53. மாதகல் கத்தோலிக்க ஆலயங்களின் வரலாறு - றோபேட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

54. மனித நடத்தையின் ஆய்வும் தொகுப்பு - றோபேட்
55. துணிந்துநில் தொடர்ந்து செய் - றோபேட்
56. அறிந்திடுவீர் சிலபுதிர்கள் - றோபேட்
57. தேவ அழைத்தல் - றோபேட்
58. மனித நடத்தைக் கோலங்கள் - றோபேட்
59. நுணசை திருபதி - சபா அருள்சுப்பிரமணி
60. சிறுவர் நாடகங்கள் - சபா அருள்சுப்பிரமணி
61. தங்கக் கலசம் - சபா அருள்சுப்பிரமணி
62. சிறுவர் நாடகங்கள் - சபா அருள்சுப்பிரமணி
63. மாதகல் பாணாகவெட்டியம்மன் வரலாறு - வி. சிற்றம்பலம்
64. சிவநாமவழி - வி. சிற்றம்பலம்
65. முதுமையில் ஆரோக்கியம் - டாக்டர் க. சிவாதரன்
66. பல்வேறு நோய்களும் மருத்துவரின் பயனுள்ள ஆலோசனைகள் - டாக்டர் க. சிவாதரன்
67. அக்கினிமுகாசுரன் வதைப்படலம் - பொன். கந்தசாமி
68. அடிப்படை இலத்திரனியல் - கலாநிதி பு. ரவிராஜ்
69. மாதகல் சைவ ஆலயங்களின் வரலாறு - திரு. கா. அழகரத்தினம்

## ஆய்வுக் கட்டுரை எழுதியோர்

01. பல்பகுதிய சூரியக் கலங்களின் கட்டமைப்பு - கலாநிதி பு. ரவிராஜன்
02. நோய் குற்றவியல் பிரிவில் புற்றுநோய் பற்றிய ஆய்வு - வைத்திய கலாநிதி க. நடராஜதிலகரத்தினம்
03. Dr. சதாசிவம் சுப்பிரமணியம்
04. பேராசிரியர் விக்கிரமசிங்கம் அருணாசலம்
05. கலாநிதி சதாசிவம் கனகசபை

பேச்சாளர் - வி. வீரசுப்பிரமணியம்
கலைஞர்கள் - S.V. கந்தசாமி
V. செல்லத்துரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைக்கு.....

| | | |
|---|---|---|
| வணங்கத்தக்கவர் | - | தாயும் தந்தையும் |
| வந்தால் போகாதது | - | புகழ், பழி |
| போனால் வராதது | - | மானம், உயிர் |
| தானாக வருவது | - | இளமை, முதுமை |
| நம்முடன் வருவது | - | பாவம், புண்ணியம் |
| அடக்க முடியாதது | - | ஆசை, துக்கம் |
| தவிர்க்க முடியாதது | - | பசி, தாகம் |
| நம்மால் பிரிக்க முடியாதது | - | பந்தம், பாசம் |
| அழிவைத் தருவது | - | பொறாமை, கோபம் |
| எல்லோருக்கும் சமமானது | - | பிறப்பு, இறப்பு |
| கடைத்தேற வழி | - | உண்மையும், உழைப்பும் |
| ஒருவன் கெடுவது | - | பொய்சாட்சி, செய்நன்றி மறப்பது |
| வருவதும் போவதும் | - | இன்பமும், துன்பமும் |
| மிகமிக நல்ல நாள் | - | இன்று |
| மிகப்பெரிய வெகுமதி | - | மன்னிப்பு |
| மிகவும் வேண்டாதது | - | வெறுப்பு |
| மிகப்பெரிய தேவை | - | சமயோஜித புத்தி |
| மிகக்கொடிய நோய் | - | பேராசை |
| மிகவும் சுலபமானது | - | குற்றம் காணல் |
| கீழ்த்தரமான விடயம் | - | பொறாமை |
| நம்பக்கூடாதது | - | வதந்தி |
| ஆபத்தை விளைவிப்பது | - | அதிக பேச்சு |
| செய்யக்கூடாதது | - | தவறுகள் |
| செய்ய வேண்டியது | - | உதவிகள் |
| விலக்க வேண்டியது | - | விவாதம், கூடாதபழக்கங்கள் |
| உயர்வுக்கு வழி | - | உழைப்பு |
| நழுவ விடக் கூடாதது | - | வாய்ப்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 11 | 24 |
| 03 | 01 |
| 1956 | 2014 |

**எமது மாதகல் சித்தி விநாயகர் முன்பள்ளி ஆசிரியை**
**கல்யாணி அவர்களின் அன்பு மாமியார்**

## அமரர். கமலம் சிவசுப்பிரமணியம்

நேற்றுச் சிரித்தபடி நிஜமாய் இருந்தவரே
கண்மூடி விழிப்பதற்குள் கதை முடிந்து போனதெங்கே
ஈவிரக்கம் இல்லா காலன் எங்குதான் கொண்டு சென்றான்
ஊதிய பலூனில் ஊசி துளைத்தது போல
உன் மறைவுச் செய்தி கேட்டு உதிரமே உறைந்ததம்மா
நின்றவர் அழுகின்றார் நினைத்ததுமே அழுகின்றார்
உள்ளத்தால் நாமெல்லாம் உன்னி உன்னி அழுகின்றோம்
நித்தமும் உன் உருவம் நினைவில் வருகையிலே
நீராண்ட மனம் எல்லாம் நினைவில் துடிக்குதம்மா
பிறக்கும்போது நீ மட்டுமே அழுதாய் - இன்று
இறக்கும்போது உறவுகளே அலறுதையா.

**அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

**26.01.2014**

**அன்னாரின் பிரிவால் துயருறும்**
**மாதகல் சித்தி விநாயகர் முன்பள்ளிச் சமூகம்.**

வானவில் பிறின்டேர்ஸ், மாதகல் வீதி, பண்டத்தரிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



ஜனனம்
11
.
03
.
1956

இறைபதம்
24
.
01
.
2014

பாணாகவெட்டி புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தின்
தர்மகர்த்தா

## அமரர்
## கமலம் சிவசுப்பிரமணியம்

எங்கே வாழ்க்கை தொடங்கும்
அது எங்கே எவ்விதம் முடியும்
இதுதான் பாதை இதுதான் பயணம்
என்பது யாருக்கும் தெரியாது
மனித உருவங்கள் மறையலாம்
மானிட நெஞ்சில் பதிந்தவை அழியாது
நேற்றுவரை எங்களுடன் இன்முகம் காட்டி
நேசமுடன் பழகியதை எம்மால் மறக்க முடியுமா?
இன்று முதல் எம்மை எல்லாம் பரிதவிக்கவிட்டு
பரமனின் பாதங்களை பற்றிய உன்போல்
அன்புள்ளங்கொண்ட இனியவரை
எங்கு நாம் தேடுவோம்

**அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவுத் துயர் பகிர்வோர்
**பாணாகவெட்டி புவனேஸ்வரி அம்மன் ஆலய**
**பரிபாலனசபையினர்.**

**26.01.2014**

வானவில் பிறின்டேர்ஸ், மாதகல் வீதி, பண்டத்தரிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 11 | 24 |
| 03 | 01 |
| 1956 | 2014 |

**எமது அன்பு நண்பன் சிவகணேஸ் அவர்களின் அன்புத் தாயார்**

## அமரர். கமலம் சிவசுப்பிரமணியம்

*அன்புடனும் பண்புடனும் பூவுலகில்*
*வாழ்ந்து நேசத்துடனும் பாசத்துடனும்*
*எம்மோடு பழகி இன்சொல் பேசி எல்லோருக்கும்*
*இன்முகம் காட்டி சுற்றத்தவருடன் அன்பும்*
*ஆதரவும் கொண்டு என்றும்*
*நல்லவராய் எல்லோருக்கும்*
*உதவி செய்யும் உத்தம*
*குணத்துடன் வாழ்ந்து எமக்கு*
*ஒரு வழிகாட்டி நீங்கள்*
*உம் பிரிவால் வருந்துயரம்*
*பெருந்துயராய் ஆனதே*
*கலங்குகின்றோம் உம் பிரிவால் நாம்*

**அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன்**
**அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர்க்கு**
**எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

பிரிவுத் துயர் பகிரும்
**மாதகல் நண்பர்கள்**

**26.01.2014**

கவிதரன் பிறிண்டேர்ஸ், வழக்கம்பரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
11
03
1956



மறைவு
24
01
2014

## அமரர். கமலம் சிவசுப்பிரமணியம்

மௌனங்கள் சூழ்ந்துகொள்ள
மனங்கள் மௌனம் கொள்ள
உங்களைப் பார்த்திருந்த விழிகள்
கண்ணீரால் கரை புரள
உங்களை இழந்ததால்
எங்கள் மனம் துடிக்குதம்மா
காலத்தின் கோலமோ??? கடவுளின் நாட்டமோ
காலம் பல உருண்டோடினாலும் காலாவதியாகாத
உங்கள் நினைவுதான் எமக்கு ஒளியாகும்
விடியல்கள் அஸ்தமனமாக
விலகிவிட்ட உங்களது
ஆத்மா சாந்தியடைய
இறைஞ்சுகின்றன இதயங்கள்

**அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன்**
**அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர்க்கு**
**எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

பிரிவுத் துயர் பகிரும்
**26.01.2014** **மாதகல் பஜார் நண்பர்கள்**

வானவில் பிறின்டேர்ஸ், மாதகல் வீதி, பண்டத்தரிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்த் துளிகள்

எமது கழக உறுப்பினராகிய பார்த்தசாரதி அவர்களின் அன்புத் தாயார்

# அமரர் சிவசுப்பிரமணியம் கமலம்



மண்ணில்
03 . 11 . 1956

விண்ணில்
24 . 01 . 2014

கனிவான தோற்றம் எம்கண் நிறைந்து நிற்குதம்மா
மரணம் நிச்சயமே மறுக்கத்தான் முடியாதே! அதுநியதி
ஆனால் தருணம் இதுவல்ல!
பாரினில் நீ உருகி நிற்க
உன்னை எண்ணினால் கண்களில் கங்கையே...
ஆறுதல் சொல்ல ஆண்டவனே வந்தாலும்
உன் ஆருயிர் அன்புக்கு ஈடாகுமா? கமலமே?
தெய்வீக முகத்திற்கு இணையாகுமா?
ஏக்கத்தின் எல்லை தனில் எமையெல்லாம்
தவிக்கவிட்டு பாரினில் நீ மறைந்த மாயமென்ன...

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு,
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!! ....

விநாயகர் விளையாட்டுக் கழகம்,
மாதகல்.

சாய்ராம் பிறிண்டேர்ஸ், சங்கானை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி !

புத்தளம் முந்தலில் வசித்த



பிறப்பு

**1956**

**11**

**03**

இறப்பு

**2014**

**01**

**25**

# சிவசுப்பிரமணியம் கமலம்

## காலமானார்...!

அன்னாரின் பூதவுடல்

2014.01.26 பிற்பகல் 1.00 மணிக்கு மாதகல் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்

பிரிவால்துயருறும் கணவன்,பிள்ளைகள், மருமக்கள், பேத்தி,உற்றார் உறவினர்கள்


**අපගේ බලවත් ශෝකය....!**

**අලහකෝන් අවමංගල්‍ය අධ්‍යක්ෂකවරු**

පුත්තලම් පාර
මුන්දලම.

0777-194165/032-2052270/077-3511235

ශාඛා - පල්ලම
පුත්තලම.

සමන් කොමියුනිකේෂන් ප්‍රාදේශීය මහ ලේකම් කාර්යාලය ඉදිරිපිට මුන්දලම - 077 5744333





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "என் வழி நேர் வழி"

"அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு" வாழ்க்கை என்பது வட்டம். அந்த வட்டத்துக்குள் தான் பிறப்பும், இறப்பும் அந்தப் பிறப்பில் இருந்து செல்லும் நீண்ட வழிதான் நமது வாழ்க்கை. அந்த வாழ்க்கையை நாம் நீதியாகவும், நேர்மையாகவும், அன்பாகவும், பண்பாகவும் அமைதி கொண்ட உள்ளத்தில் இறைவன் வாழ்கிறான்.

நம்மைப் படைத்த தாய் தந்தைதான் நமக்குக் கடவுள். நமது தாயின் மொழியும் மதமும் நாம் பிறப்பால் பிறப்புரிமை ஆகும். அந்த பிறப்புரிமையை யாராலும் தடுக்கவோ, அடக்கவோ முடியாது. "தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா" பொங்கு தமிழுக்கு இன்னல் ஏற்பட்டாலும் சங்காரம் இசை என சங்கே முழங்கு. ஆண்ட பரம்பரையிடம் இருந்து அன்னியன் மீட்டெடுத்து ஆட்சி நடத்தினான். நாட்டை விட்டு வெளியேறும் போது ஆளத் தெரியாத பண்பற்ற, நீதி நேர்மையற்ற, காட்டுமிராண்டி படிப்பறிவற்ற மக்களிடம் நாட்டை ஆழவிட்டு சென்றான். இதுவரை காலமும் எத்தனையோ தலைவர்கள் மாறிமாறி வந்தவர்கள். இந்த நாட்டின் தலைவர்கள் அல்ல. கொலைகார, கொள்ளைக்கார தலைவர்கள் இந்த நாட்டு மக்களை கொலையும், கொள்ளையும், கற்பழிப்புமாக வழி நடத்திய தலைவர்கள் பரம்பரை பரம்பரையாக வந்த தலைவர்கள் இந்த நாட்டின் அரசர்கள் அல்ல. இந்த நாட்டையும் தமிழர்களையும் வேட்டையாடி பயங்கரவாதி என முத்திரை பதித்து வெளிநாட்டவரின் பணத்தையும் ஆயுதத்தையும் கைநீட்டி பிச்சையாகப் பெற்று தங்கள் வாயையும் வயிற்றையும் நிரப்பும் கொள்ளையர்களே தவிர நாட்டுத் தலைவர்கள் அல்ல. ஆண்ட பரம்பரை ஆளவேண்டிய சந்தர்ப்பம் இவர்களால் உருவாகும்.

முல்லைக்கொண்டுதான் முல்லை எடுக்க வேண்டும். தமிழன் ஒற்றுமை இன்றி செயல்பட்டதால் இன்று முல்லிவாய்க்காலுக்கு கொண்டு சென்றான். எப்போ ஒன்றுபட்டு வாழ்கிறானோ அப்போ தமிழன் தலைநமிர்ந்து வாழ்வான்.

"எனது வழி நேர் வழி"

**வை. சிவசுப்பிரமணியம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மூன்றெழுத்தின் மகிமை

| | | |
|---|---|---|
| உலகில் உள்ள "உயிர்" | - | மூன்றெழுத்து |
| சக்தியின் வடிவமாகிய "அன்னை" | - | மூன்றெழுத்து |
| அன்னை காட்டும் "அன்பு" | - | மூன்றெழுத்து |
| அன்பினை உயர்த்தும் "அறிவு" | - | மூன்றெழுத்து |
| அறிவினை வளர்க்கும் "பள்ளி" | - | மூன்றெழுத்து |
| பள்ளியில் கற்கும் "கல்வி" | - | மூன்றெழுத்து |
| கல்வியினால் வரும் "பதவி" | - | மூன்றெழுத்து |
| பதவியினைத் தரும் "இளமை" | - | மூன்றெழுத்து |
| இளமை தரும் "காதல்" | - | மூன்றெழுத்து |
| காதலால் வரும் "மனைவி" | - | மூன்றெழுத்து |
| மனைவி தரும் "மழலை" | - | மூன்றெழுத்து |
| மழலைக்கு ஏற்படும் "செலவு" | - | மூன்றெழுத்து |
| செலவிற்கு தேவைப்படும் "பணம்" | - | மூன்றெழுத்து |
| பணத்தினை செலவாக்கும் "வயிறு" | - | மூன்றெழுத்து |
| வயிறு சுருங்கினால் வரும் "முதுமை" | - | மூன்றெழுத்து |
| முதுமையில் வரும் "முடிவு" | - | மூன்றெழுத்து |
| முடிவின் பின் தேவைப்படும் "பெட்டி" | - | மூன்றெழுத்து |
| பெட்டியை எடுத்துச் செல்லும் "ஊர்தி" | - | மூன்றெழுத்து |
| ஊர்தி செல்லும் இடம் "சுடலை" | - | மூன்றெழுத்து |
| சுடலையில் வைக்கும் "கொள்ளி" | - | மூன்றெழுத்து |
| கொள்ளியின் சுவாலையிடும் "அனல்" | - | மூன்றெழுத்து |
| அனலின் பின் வரும் "அஸ்தி" | - | மூன்றெழுத்து |
| அஸ்தியை கரைக்கும் "கடல்" | - | மூன்றெழுத்து |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனடி சேர்ந்த அமரர் கமலம் சிவசுப்பிரமணியம் வம்சவிருட்சம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





எங்கள் இதயங் கனிந்த

# நன்றிகள்

எமது குடும்பத் தலைவி

**அமரர் கமலம் சிவசுப்பிரமணியம்**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்து பல வழிகளிலும்
உதவியவர்களுக்கும், ஈமைக் கிரியைகளில் கலந்து
கொண்டோருக்கும், இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டோருக்கும்,
கண்ணீர் அஞ்சலி செய்தோருக்கும், மற்றும் பல வழிகளிலும் உதவியும்.
ஒத்தாசையும் நல்கியவர்களுக்கும்,அஞ்சலி உரை
நிகழ்த்தியவர்களுக்கும், நினைவு மலருக்கு
இரங்கல் செய்தி தந்தோருக்கும்,
அழகக்கோண் மலர் சாலையினருக்கும்,
மங்கள் வாத்தியக் குழுவினருக்கும்,
அந்தியேட்டி, சபிண்டீகரக் கிரியை நிகழ்வுகளிலும் கலந்து
அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்தவர்களுக்கும்,
அந்தியேட்டிக் கிரியைகள் செவ்வனே
செய்த குருமார்களுக்கும் எமது உளமார்ந்த
நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

நாவலர் வீதி,
மாதகல்.
23-02-2014



இங்ஙனம்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



மாதகல் பாணாகவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய
சித்திரத்தேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org